TAMILMANAM | தமிழ்மணம்
Peer-Reviewed · International · Monthly Journal of Tamil Studies
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

RESEARCH PAPER

# அடுக்கம் நாவலில் மலைசார் பழங்குடியினரின் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்

## The Lifestyle and Cultural Elements of Hill Tribes in the Novel Adukkam

**CLEMY JENI PRIYA J.,[1,*], Dr.J. BENNY[2]**

[1] *Research Scholar, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India., IN*

[2] *Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India., IN*

***தொடர்புக்கு:** CLEMY JENI PRIYA J., — priya.j.joyel@gmail.com

| பெறப்பட்டது | திருத்தப்பட்டது | ஏற்கப்பட்டது | வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 4 October 2026 | 25 September 2026 | 1 October 2026 | 2 October 2026 |
| **கட்டுரை எண்**<br>MS26-4SZ0S3 | **DOI**<br>https://doi.org/10.63300/tm1205 2026.04 | **தொகுதி / இதழ்**<br>தொகுதி 12, இதழ் 05 (October 2026) | P50-57 |

## Abstract

Daniel Selvaraj is a prominent figure in the world of Tamil fiction for having vividly chronicled the lives of marginalized communities. His novel Adukkam documents the lifestyles of hill tribes such as the Muthuvar, Pulayar, Paliyar, and Kuravar. The Muthuvar people lived in huts constructed from narcotic grasses and bamboo poles; their diet included honey and fried greens mixed with honey, and they practiced slash-and-burn agriculture. They also upheld a tradition of hospitality, serving guests on a specific type of banana leaf known as ‘Kookka’. The Pulayar people wore garments known as ‘Mundu’ and ‘Paadisu’ to cover their bodies; their spiritual practices included worshipping the Peepal tree and Lord Murugan in shrines made of grass. The novel also reveals their history of waging struggles to reclaim their rights through social renaissance movements in the late 19th century. The Paliyar people practiced self-reliance, carrying their own food and water from home rather than accepting or consuming anything from others when venturing out. The novel also highlights the sexual violence and suffering they endured at the hands of government officials and the police. The Kuravar community lived in palm-leaf huts and employed multilingual elders as guards for protection; having lost their lands to landlords, they were driven by poverty into illicit trades such as the production of illicit liquor, cannabis cultivation, and smuggling.

**திறவுச்சொற்கள்:** Adukkam; tribal people; struggle for survival; Muduvar; Pulayar; Paliyar; Kuravar.

### சுருக்கம்

தமிழ் புனைக்கதை உலகில் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை உரக்கப் பதிவு செய்த முதன்மைப் படைப்பாளிகளுள் டேனியல் செல்வராஜ் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவரின் ‘அடுக்கம்’ நாவலில் முதுவர், புலையர், பளியர், குறவர் ஆகிய மலைசார் பழங்குடியின மக்களின் வாழ்வியல் பதிவுகள் காணக்கிடக்கின்றன. முதுவர் இன மக்கள் போதைப் புற்களாலும் மூங்கில் கழிகளாலும் குடில்கள் அமைத்து வாழ்ந்துள்ளனர். தேன் மற்றும் தேன் கலந்த பொரித்த கீரைப் பண்டங்களை உணவாக உட்கொள்கின்றனர்.காட்டெரிப்பு வேளாண்மை முறையைப் பின்பற்றியுள்ளனர் .‘கூக்கா’

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

எனப்படும் வாழை இலையில் விருந்தினர்களை உபசரிக்கும் பண்பினைக் கடைபிடித்துள்ளனர் முதுவர் இன மக்கள். புலையர் இன மக்கள் உடலை மறைக்க ‘முண்டு’ மற்றும் ‘பாடிசு’ ஆடை ஆடையை அணிந்துள்ளனர். அரசமரத்து வழிபாட்டோடு முருகப்பெருமானுக்குப் புற்கூடாரம் அமைத்து வழிபட்டுள்ளனர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமூக மறுமலர்ச்சி இயக்கங்கள் வழியே உரிமை மீட்புப் போராட்டங்களை நடத்திய வரலாறு ஆகியவை புலையர் இன மக்கள் வழியே வெளிப்படுகின்றன. பளியர் இன மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பிறரிடம் எதையும் வாங்கி உண்ணாமல் தங்களுக்குத் தேவையான உணவு, தண்ணீரை வீடிலிருந்தே கொண்டு செல்லும் தற்சார்பு முறையைப் பின்பற்றியுள்ளனர். அரசு அதிகாரிகளாலும் காவல்துறையினாலும் சந்திக்கும் பாலியல் வன்கொடுமைகளும் துயரங்களும் நாவலில் வெளிச்சமிட்டுக் காட்டப்படுகின்றன. குறவர் இனத்தைச் சார்ந்தவர்கள் ஓலைக் குடில்களில் வாழ்வதுடன், பாதுகாப்புக்காகப் பல மொழிகள் அறிந்த மூத்த மனிதரைக் காவலாளியாகக் கொள்கின்றனர்.நிலக்கிழார்களால் நிலங்களை இழந்து வறுமையின் காரணமாகக் கள்ளச்சாராயம், கஞ்சா, கள்ளத்தோணி போன்ற சட்டவிரோதத் தொழில்களுக்குத் தள்ளப்படுகின்றனர்.

---

**முன்னுரை**

மனித நாகரிகத்தின் தொடக்க காலம் தொட்டே இயற்கையோடு இயைந்து வாழும் தொல்குடிகள், தமக்கென தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டுள்ளனர். பழங்குடியின மக்கள் இயற்கையை இறைவன் அளித்த கொடையாகக் கருதிப் பேணிப் பாதுகாக்கின்றனர். தமிழ் இலக்கியத்தில் குறிஞ்சி நிலப் பதிவுகள் சங்க காலம் தொட்டே வழக்கில் இருந்தாலும், நவீனத் தமிழ் நாவல்களே பழங்குடியினரின் அகப்புற வாழ்க்கையையும், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் விரிவாகப் பதிவு செய்து வருகின்றன.அந்த வரிசையில், எழுத்தாளர் டேனியல் செல்வராஜ் அவர்களின் 'அடுக்கம்' நாவல், மேற்குத் தொடர்ச்சி மலையைத் தாயகமாகக் கொண்ட பழங்குடி மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளது. இந்நாவலின் முக்கியக் கதாபாத்திரமான நாராயணன், தலித் சமூகத்தைச் சார்ந்தவன். அரசு அதிகாரியாகப் பொறுப்பேற்கும் இவன், குறவர் இன மக்களின் முன்னேற்றத்திற்காக முக்கிய நடவடிக்கைகளை எடுக்கிறான்.அரசியல் சூழ்ச்சியால் இடமாற்றம் செய்யப்படும் இவன், தன்னுடைய தோழியுடன் இணைந்து இடுக்கி மாவட்டத்தில் வாழும் மலைசார் பழங்குடியினரான புலையர், முதுவர், பளியர் போன்ற மக்களின் வாழ்வியலையும் அவர்கள் சந்திக்கும் சவால்களையும் நேரில் கண்டு அறிந்து கொள்கிறான்.இந்நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ள புலையர், முதுவர், பளியர், குறவர் ஆகிய நான்கு இன மக்களும் ஒரே பகுதியில் வாழ்ந்தாலும், தமக்கே உரிய தனித்துவமான இயற்கை சார்ந்த வாழ்வியல் முறையையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டுள்ளனர். அம்மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் விரிவாக ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

**பழங்குடியினர்**

'பழங்குடி' என்பது தொன்மையான குடி என்று பொருள்படும். பழங்குடியினர் எளிமையுடனும் இயற்கையோடு இயைந்தும் தம் வாழ்வை நடத்துகின்றனர். இவர்களுக்கென்று தனித்துவமான மொழி, பண்பாடு, கலைகள் உண்டு. இக்கருத்தை ஜான் கென்னடி,

***"ஆதிகால முதல் இப்புவியில் வாழ்ந்து வருபவர்கள் பழங்குடியினர். ஆதிக்க இனங்களின் ஆக்கிரமிப்பினால் காடுகளை நோக்கி விரட்டப்பட்டவர்கள் இவர்கள். இந்தியாவில் இவர்களை அடிமைப்படுத்தி தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயன்றவர்கள் ஆரியர்கள். இந்த ஆதிக்க சக்திகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள,தங்களுக்கென்றே உரித்தான கலாச்சாரத்தையும், வாழ்க்கை முறையும் உருவாக்கிக் கொண்டனர்"***

***(கோடை மலைப் பழங்குடியினர், பக். 13)***

என்று குறிப்பிடுகிறார். பழங்குடியினர் காடுகளை மையமாகக் கொண்டு வாழ்பவர்கள். இந்தியாவில் காணப்படும் பழங்குடியினரைப் பற்றி,

***"உலகின் பழங்குடியினருள் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவில் வாழ்கின்றனர். இவர்களில் 90 விழுக்காட்டினர் காடுகளில் வாழ்கின்றனர்"***

***(கோடை மலைப் பழங்குடியினர், ப. 15)***

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன. தமிழ்நாட்டில் 36-க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பழங்குடியினர் வாழ்ந்து வரும் சூழலில், 'அடுக்கம்' நாவலில் முதுவர், புலையர், பளியர், குறவர் ஆகிய நான்கு பழங்குடியினரைப் பற்றிய மானுடவியல் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

**முதுவர் பழங்குடி**

'முது' என்றால் 'வயதான' அல்லது 'தொன்மையான' என்று பொருள். இலக்கியச் சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது 'முதுகுடி' என்பது தொன்மையான குடி என்றும், அதன் அடிப்படையில் பெயர் பெற்ற 'முதுவர்' என்போர் மலைகளில் வாழும் தொன்மையான பழங்குடியினர் என்றும் அறியமுடிகிறது.

முதுவர் இன மக்கள் தங்களது இருப்பிடத்தைக் காடுகளுக்குள்ளேயே அமைத்துக் கொள்கின்றனர். இவர்கள் போதைப் புற்களாலும், மூங்கில் கழிகளாலும் செய்யப்பட்ட கூரைக்குடில்களில் வாழ்கின்றனர். தாங்கள் வாழும் சுற்றுப்புறத்தை மிகவும் தூய்மையாக வைக்கும் இயல்புடையவர்களாக உள்ளனர். இடம்பெயர்ந்து சென்றாலும் செல்லும் இடங்களில் தங்களுக்கு வேண்டிய குடில்களைத் தாங்களே அமைத்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள்.

முதுவர்கள் தேனையும், தேன் கலந்த பொரித்த கீரைப் பண்டத்தையும் உணவாக உட்கொள்கின்றனர். தேனீக்களுக்குச் சிறு சேதமும் விளைவிக்காமல் தேன் எடுக்கும் இவர்களின் சூழலியல் சார்ந்த நுட்பமான உத்தியை,

***"காட்டு மூலிகைகளை மென்று ஊதியவுடன் தேனீக்கள் ஒதுங்கிக் கொள்ளும். ஒரு தேனீக்குக் கூட சேதம் வராது. அது பொந்து தேனாக இருக்கலாம், கொழுத்த தேனாகவும்***

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

***இருக்கலாம். ஈக்கள் ஒதுங்கியவுடன் தேன் குஞ்சுகள் இருக்கும் அடைகளை விட்டுவிட்டு தேனடைகளை மட்டும் சேகரித்துக்கொண்டு திரும்புவார்கள்"***

***(அடுக்கம், ப. 151)***

என்ற நாவல் வரிகள் உணர்த்துகின்றன. பாறைகளில் புகையிட்டுத் தேன் எடுக்கும் முறையை,

***"பாறையில் இருந்து தேன் அடையில் புகைப் போட்டு தேனீக்கள் பறந்து போனபின் தேன் எடுப்பார்"***

***(முதுவர் பழங்குடி, ப. 44)***

என்னும் சான்றும் உறுதிப்படுத்துகிறது. இவர்கள் காட்டெரிப்பு வேளாண்மை முறையிலேயே தங்களது விவசாயத்தை மேற்கொள்கின்றனர். இச்சாகுபடி முறையின் தேவையை முனிவர். சி. நல்லதம்பி அவர்கள் குறிப்பிடுகையில்,

***"காட்டெரிப்பு வேளாண்மை முறை மலைப்பகுதிகளில் வாழ்க்கையை மேற்கொள்கின்ற மானுடர்களின் தேவையின் காரணமாகவே மேற்கொள்ளப்படுகிறது"***

***(தமிழக பழங்குடி வழக்காற்றியல்: கல்வராயன் மலைப் பழங்குடி மக்கள், ப. 70)***

என்று சுட்டிக்காட்டுகிறார். இக்கூற்றின் மூலம் பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தில் காட்டெரிப்பு வேளாண்மை முறை வகிக்கும் முக்கியத்துவத்தை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. தேன் சேகரித்தலும், மலைச் சாகுபடியுமே இவர்களின் முதன்மைத் தொழில்களாகும். மேலும், இவர்கள் புற்களால் வேயப்பட்ட பாய்களைப் பயன்படுத்துகின்றனர்.

முதுவர்கள் தங்களை நாடி வரும் விருந்தினர்களை உபசரிப்பதைப் பெருங்கடமையாகக் கொள்கின்றனர். விருந்தாளிகளை உபசரிப்பதற்காகவே தனிக் குடில் அமைக்கும் பழக்கம் இவர்களிடம் உள்ளது. அன்பான உரையாடல்கள் மூலம் 'கூக்கா' என்று அழைக்கப்படும் வாழையிலையில் உணவும் பானமும் பரிமாறுகின்றனர். விருந்தினர் விடைபெறும்போது மலைத்தேனையும், துணிப் பொதிகளில் பொரித்த கீரையையும் பரிசாக அளித்து அனுப்புகின்றனர்.

**புலையர் பழங்குடி**

புலையர் சமூகம் பழந்தமிழகத்தின் குறிஞ்சி மற்றும் மருத நிலப் பகுதிகளோடு தொடர்புடைய மிகத் தொன்மையான பழங்குடி சமூகங்களுள் ஒன்றாகும். 'புலம்' என்றால் நிலம் அல்லது வயல் என்று பொருள். நிலத்தைச் சார்ந்து விவசாயப் பணிகளை மேற்கொண்டு வாழ்ந்ததால் இவர்கள் 'புலையர்' எனப் பெயர் பெற்றதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

புலையர் இன மக்கள் அடர்ந்த காட்டுப்பகுதியிலேயே தங்களின் குடியிருப்புகளை அமைத்துள்ளனர். இதனை மானுடவியல் அறிஞர் பிலோ இருதயநாத்,

***"புலையர்களைக் காணும் போதே காட்டில் வாழும் மக்கள் என்று காண்போர் கூறுவர்"***

***(பழங்குடிகள், ப. 66)***

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

என்று குறிப்பிடுகிறார். புலையர் இனப் பெண்கள் உடலை மறைக்க 'முண்டு', 'பாடிசு' என்னும் ஆடைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனை,

*"பெண்கள் முண்டும் பாடிசு என்று சொல்லப்படும் கமிசும் அணிந்திருந்தனர்"*

*(அடுக்கம், ப. 156)*

என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன. 'முண்டு' என்பது இடுப்பில் உடுத்தப்படும் கீழாடை; 'பாடிசு' என்பது உடலின் மேல்பகுதியை மறைக்கப் பயன்படும் ரவிக்கையாகும். இது தமிழக-கேரள எல்லைப் பகுதி வாழ் மக்களின் பாரம்பரிய ஆடை அமைப்பாகும்.

அரச மரத்தின் வேர்ப்பகுதியில் கல்லை நட்டு, குங்குமமிட்டுத் தெய்வமாக வழிபடும் முறையும், முருகப்பெருமானை வழிபடுவதற்கெனத் தனிப் புற்கூடாரம் அமைத்து வழிபாடுகள் நடத்தும் முறையும் இவர்களிடம் காணப்படுகிறது. இவ்வினப் பெண்கள் மூங்கில் கூடை முடையும் தொழிலிலும் ஈடுபடுகின்றனர்.

புலையர் சமூகத்தினர் கடுமையான உழைப்பாளிகளாவர். தொடக்க காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கும் அடிமைத்தனத்திற்கும் ஆளான இவர்கள், 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமூக மறுமலர்ச்சி இயக்கங்கள் மூலம் போராட்டம் நடத்தி அதில் வென்றுள்ளனர். பெண்களுக்குக் கல்வி உரிமைகள் மறுக்கப்பட்டபோது, நிலக்கிழார்களின் நிலங்களில் பணிசெய்ய மறுத்துப் போராட்டம் நடத்தினர். இதுவே புலையர் சமூகத்தின் முதல் வேலைநிறுத்தப் போராட்டமாகக் கருதப்படுகிறது. இத்தகைய வரலாற்றுப் போராட்டங்களின் விளைவாக, தற்போது மலைகளில் வாழும் புலையர்கள் நில உரிமையாளர்களாகவும் மாறத் தொடங்கியுள்ளனர்.

**பளியர் பழங்குடி**

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் பூர்வகுடிகள் பளியர்கள் ஆவர். "பளி" என்ற சொல் "மலை" அல்லது "காடு" சார்ந்த இடங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது..

பளியர் இன மக்களிடம் அயலாளரையோ அல்லது தலைவர்களையோ சந்திக்கச் செல்லும்போது தங்களால் சேகரிக்கப்பட்ட மலைத்தேனை அன்பளிப்பாக வழங்கும் பழக்கம் உள்ளது. இதனை,

*"ஒரு பெரிய மனிதரைச் சந்திக்கப் போகும்போது எப்படி வெறும் கையுடன் போக முடியும்?' திருமதி ஜெகந்நாதன் சொல்லவும், பாண்டியன் தேன் பாட்டிலை எடுத்துப் பார்த்துத் திரும்பவும் மேஜையில் வைத்த போது..."*

*(அடுக்கம், ப. 181)*

என்ற வரிகள் விளக்குகின்றன. மேலும், இவர்கள் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பிறரிடம் எதையும் வாங்கி உண்ணாமல், தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீரைக் வீட்டிலிருந்தே கொண்டு செல்லும் தற்சார்பு முறையைப் பின்பற்றுகின்றனர்.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

அமைதியான வாழ்க்கை வாழும் பளியர் இன மக்கள், அரசு அதிகாரிகளாலும் காவல்துறையினராலும் சந்தித்த வன்முறைகளையும் பாலியல் சுரண்டல்களையும் 'அடுக்கம்' நாவல் பதிவு செய்துள்ளது.

***"காவல்துறையினராலும் வனத்துறை அதிகாரிகளாலும் ஒரு மலை கிராமமே நள்ளிரவில் முற்றுகையிடப்பட்டு இளம்பெண்களும் கர்ப்பிணிகளும்கூட சீரழிக்கப்பட்டனர்"***

***(அடுக்கம், ப. 182)***

என்ற வரிகள் அதிகார வர்க்கத்தின் வன்முறைக்குச் சான்றாக நிற்கின்றன. காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்ட கணவனைத் தேடி வந்த பளியர் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவதையும், அவர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதையும் நாவல் வெளிப்படுத்துகிறது. இதனால் காவல்துறையின் மீதான இவர்களின் நம்பிக்கையின்மையை,

***"தற்காலத்தில் காவல் நிலையங்களுக்குச் சென்றால் காவல்துறையினரின் அணுகுமுறை முற்றிலும் மாறாக உள்ளது. எங்களது பண்பாட்டுச் சூழலைச் சிதைக்கும் விதமாக உள்ளது"***

***(பெ. பழனிச்சாமி, பளியர் இன மக்களின் வாழ்வியல்)***

என்ற ஆய்வுக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

**குறவர் பழங்குடி**

சங்க காலம் தொட்டே குறிஞ்சி நிலத்தோடும் இயற்கை சார்ந்த வாழ்வியலோடும் நெருங்கிய தொடர்பு கொண்ட தொல்குடிகளுள் குறவர் இனமும் ஒன்றாகும்.

குறவர்கள் வாழும் குடியிருப்பு பகுதி 'குப்பம்' என அழைக்கப்படுகிறது. இவர்கள் மலை அடிவாரங்களில் தென்னை ஓலைகளாலும் சணல் பைகளாலும் கூரை அமைத்து வசிக்கின்றனர். குறவர் இன மக்கள் கூடை முடைதலைத் தன் முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளதை,

***"குப்பத்தின் நடுவில் நிற்கும் ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்து ஒரு வயதான மனிதன் மட்டும் கூடை முடிந்து கொண்டிருக்கிறான்"***

***(அடுக்கம், ப. 91)***

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

அரசு அதிகாரிகளின் அத்துமீறல்களுக்கும் கைது நடவடிக்கைகளுக்கும் அஞ்சும் இவர்கள், குப்பத்திற்குப் பாதுகாப்பாகப் பல மொழிகள் அறிந்த மூத்த மனிதர் ஒருவரைக் காவலாளியாக நியமிக்கின்றனர். வெளிநபர்கள் வரும்போது அவர்கள் நல்லவர்களா என்பதை அக்காவலாளி உறுதிசெய்த பின் பின்னரே மக்கள் வீட்டை விட்டு வெளியே வருகின்றனர்.இதனை

***"கோட்டானும் குயிலும் சேர்ந்து கூவுவது போன்ற விசித்திரமான ஓசை. காடே எதிரொலிப்பது போன்ற ஓசை இதற்குப் பிறகே பெண்களும் பிள்ளைகளும் குடியிருப்பு நோக்கி வந்தன"***

***(அடுக்கம், ப. 93)***

என்ற வரிகளுக்கேற்ப பல விதமான பறவைகளின் மொழியை ஓசை எழுப்பி மக்களை வெளியே வரவழைக்கும் பாதுகாப்பு உத்தியைக் கையாண்டுள்ளனர்.

குறவர் இன மக்களுக்கு அரசு அளித்த நிலங்களைப் பண்ணையார்கள் போலி ஆவணங்கள் மூலம் கைப்பற்றிக்கொண்டதால், வறுமை காரணமாகக் கள்ளச்சாராயம், கஞ்சா வியாபாரம் போன்ற சட்டவிரோதத் தொழில்களுக்குள் தள்ளப்படுகின்றனர். மேலும், வாழ்வாதாரத்திற்காக ஆபத்தான 'கள்ளத்தோணி' வேலைக்கும் செல்கின்றனர். இதனை,

***"எங்க ஆம்பளைங்க சில பேரு கள்ளத்தோணி வேலைக்குப் போறாங்க' என்று சொன்ன பெண் பெருமூச்சுவிட்டு ஒரு கணம் தன்னுள் அமிழ்ந்த வண்ணம், 'கள்ளத்தோணிக்குப் போனவுக திரும்பினாத்தான் உண்டு'"***

***(அடுக்கம், ப. 93)***

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. சட்டபூர்வ ஆவணங்களின்றி, கடல் வழியே இரகசியமாக உயிரைப் பணயம் வைத்து மனிதர்களையோ பொருட்களையோ கடத்தும் இத்தொழில், பழங்குடியினர் சந்திக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு சான்றாக அமைகிறது.

**முடிவுரை**

உலகில் அதிக எண்ணிக்கையில் வாழும் மனித இனம், இயற்கையின் ஆற்றலைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, தன் தேவைகளுக்காக அதனைச் சூறையாடி வருகிறது. இதனால் உலகளாவிய அளவில் சுற்றுச்சூழல் சீர்கேடும் மாசடைதலும் தீவிரமடைந்து வருகின்றன. இச்சூழலில், இயற்கையோடு இயைந்து வாழ்வதோடு, காடுகளின் பாதுகாப்பு அரணாகத் திகழும் மலைசார் பழங்குடியின மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் கற்றுக்கொள்வது இன்றைய மனிதகுலத்திற்கு மிக அவசியமாகிறது.இருப்பினும், நிலப்பிரபுத்துவச் சுரண்டல், அதிகார வர்க்கத்தின் பாலியல் மற்றும் உடல் ரீதியான வன்முறைகள், நில அபகரிப்பு போன்றவற்றால் இப்பழங்குடி மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரமும் பண்பாட்டு அடையாளங்களும் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. எனவே, காடுகளையும் மலைகளையும் மட்டுமே நம்பி வாழும் தொன்மையான இப்பழங்குடி மக்களின் கலாச்சார அடையாளங்களைப் பாதுகாப்பதோடு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் வாழ்வாதாரப் பாதுகாப்பையும் அரசு மற்றும் சமூக அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும்.

**துணை நூற்பட்டியல்**

1. டி.செல்வராஜ்.அடுக்கம், முதற்பதிப்பு டிசம்பர் 2021, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ( பி) லிட், சென்னை 600050.
2. முனைவர் சி நல்லதம்பி. தமிழகப் பழங்குடி வழக்காற்றியல் கல்வராயன் மலை பழங்குடி மக்கள், முதற்பதிப்பு டிசம்பர் 2011, புலம், சென்னை 600005.
3. பெ. பழனிச்சாமி, பளியர் இன மக்களின் வாழ்வியல், முனைவர் பட்ட ஆய்வாளர், புதுப்புனல், செப்டம்பர் சிறப்பிதழ் 2, 2023.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol.12 · Issue 05 ·October 2026
https://www.tamilmanam.in

4. பிலோ இருதயநாத். பழங்குடிகள், இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1965, மல்லிகை பதிப்பகம்,தியாகராய நகர், சென்னை -17.
5. கால.மஞ்சுளா, முதுவர் பழங்குடி, முதற்பதிப்பு டிசம்பர் 1992, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 625001.
6. ஜாண் கென்னடி. சே.ச. கோடை மலைப் பழங்குடியினர், முதற்பதிப்பு 1999, முகில் வெளியீடு, மதுரை.

© 2026 CLEMY JENI PRIYA J.,, Dr.J. BENNY. https://creativecommons.org/licenses/by/4.0 வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..